25



பொய்யாமொழி

ஆசிரியர் — ஈ. பாஸ்கரனார்.

543
4-50.

செய்யா மொழிக்குந்திருவள் ளுவர்மொழிந்த
'பொய்யாமொழி'க்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

கதிர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 1981, புரட்டாசி 25 (11—10—50) புதன்கிழமை. | மணி 7

சாய்ந்த தராசு.

வாழ்வதிலும் நலம் சூழ்வதிலும் புவி
மக்களெலாம் ஒப்புடையார்
ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதோ—இதை
இன்பமெனச் சிலர் கொள்ளுவதோ
கூழுக்குப்பற்பலர் வாடவும் சிற்சிலர்
கொள்ளையடிப்பதும் நீதியோ—புவி
வாழ்வதுதான் எந்தத்தேதியோ
சிற்சிலர் வாழ்ந்திடப் பற்பலர் உழைத்துத்
தீர்க எனுமிந்தலோகமே—உரு
அற்றொழித்தாலும் நன்றாகுமே
காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் அவன்
காணத் தகுந்தது வறுமையாம் அவன்
பூணத்தகுந்ததும் பொறுமையாம்
அன்பெனச் சொல்லியிங்காதி—முதற்பேத
வன்மை வளர்த்தனர் பாரிலே—அதன்
பின்பு கண்டோமிதை நேரிலே
மக்கள்பசிக்க மடத்தலைவர்க்கெனில்
வாழையிலை முற்றும் நறுநெய்யாம்—இது
மிக்குயிர்மேல் வைத்தகருணையாம்
கோயிலிலே பொருள்கூட்டும் குருக்களும்
கோதையர் தோளினில் சாய்கின்றார் இங்கு
நோயினிலே மக்கள் மாய்கின்றார்
கோரும் துரைத்தனத்தாரும் பெரும்பொருள்
கொண்டவர்க்கே நலம் கூட்டுவார் உழைப்
போரிடமே கத்தி தீட்டுவார்
மக்களெல்லாம் சமமாக அடைந்திட
மானிலம் தந்ததில் வஞ்சமோ—பசி
மிக்கவரின் தொகை கொஞ்சமோ

—பாரதிதாசன்

வார இதழ். ★ விலை அணா 1.

வாழ்த்து செய்திகள்.

N. V. நடராசன்,
ஆசிரியர் 'திராவிடன்' சென்னை.

வாழ்க! "பொய்யாமொழி"

கலை, மொழி, அரசியல் சமுதாயம் ஆகிய அனைத்திலும் தாழ்ந்துள்ள திராவிடத்தின் விடுதலைக்கு பொய்யாமொழி சிறந்த பணியாற்ற வேண்டுகிறேன்.

ஃ ஃ ஃ

M. சுந்தரம்
ஆசிரியர் துவக்கப்பள்ளி, குடவாயில். 15—9—50

அன்புள்ள ஆசிரியருக்கு வணக்கம்.

தங்கள் 6—9—50வ இதழ் கண்டு மகிழ்ச்சி. தாங்கள் முன்னுள் கிராமசேவையிலும், மாவட்ட சேவையிலும் ஈடுபட்டீர்! எங்கட்கு நன்கு தெரியும். இன்னுள் தேசசேவையாகவும், மனிதனை மனிதனுக்கவும் பெண் இனத்தைப்பாராட்டி, பெண்களை சீர்திருத்தவும் முயன்ற உம்எண்ணம் நன்குஈடேற ஆண்டவன் அருள்புரிவானாக! உம் தைரியம், லட்சியம், ஆயுள் விருத்தி இவைகள் பெருக ஆண்டவனை பன்முறையும் வேண்டுகிறேன். பொய்யாமொழி உலகில் என்றும் நிலைத்து நாளுக்கு நாள் ஈடேற ஆண்டவனை இறைஞ்சுகின்றனம். உம் தொண்டின் புகழும் முயற்சியும், வளர்பிறைபோல் வளர்க! இவைகட்கு வேண்டுவன புரிய நாங்கள் சித்தமாய் நிற்கின்றோம் என கேட்டுக்கொள்கிறேன்.

ஃ ஃ ஃ

N. சுந்தரி, ஆசிரியை,
மாணவி சங்கத தலைவி. 15—9—50

ஐயா! முன்கடிதத்தில் கண்டவை யாவும் உண்மையே! இதில் என்னால் முடிந்த சேவைகளைப் புரியவும் சித்தமாய் இருக்கிறேன் என்பதை எனது மாணவிகள் மூலமாயும், எனது சொந்த முறையிலும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஃ ஃ ஃ

R. கலியபெருமாள், சேலம்.

பொய்யாமொழி வெளிவருவது குறித்து மிக மகிழ்கிறேன். திருக்குறளின் பெருமையை ஆபாச குப்பைகூளங்களின் சிறுமையை திராவிடர் உணரத் தலைப்படும் இந்நாளில் பொய்யாமொழி வருவது மிகவும் பொருத்தம். பல ஆண்டுகட்கு முன்னரே நண்பர் பாஸ்கரனார் அவர்கள் தன்மான உணர்ச்சி கொண்டு சீர்திருத்த இயக்கத்திலீடுபட்டு செயற்கரிய தொண்டுபல செய்தார். குறளுக்கு திராவிடலேபிள் ஒட்டப்பட்டு பெரியாரின் பிரச்சார பீரங்கித் துணை கிடைத்ததும் அதன் உண்மையைப் பலர் அறிய நேர்ந்தது. ஆபாச மூடுபனி விலக விலக குறளின் பெருமை தெளிவடையத்தான் போகிறது. குறள் கருத்துக்களைத் தருவதுடன் நில்லாது இந்த ஏடு பெரியாரின் ஆணைவழி நின்று திராவிட கழக முரசாகத் திகழ வேண்டுமென்பது எனது ஆவல். மாற்றாருக்கு மண்டையடி தந்து பழமைக்கு அணுகுண்டென இந்த ஏடு விளங்க வேண்டும். நண்பர் பாஸ்கரனார் ஆசிரியர் என்றால் இவை அத்தனையும் நான் எதிர்பார்ப்பது தவறல்லவே!

வாழ்க பொய்யாமொழி! வணக்கம்.

ஃ ஃ ஃ

சீ. மா. சொக்கலிங்கம்
கிராமத்தலைவர் கொகத்தம். 21—9—50

வணக்கம்.

ஐயா, தாங்கள் "பொய்யாமொழி" என்னும் வாரத்தாள் எனக்கு கிடைத்தது. மிக்கசந்தோஷம் நம் உடையார்பாளையம் தாலூகா எந்த நிலையிலும் பிற்போக்கான நிலையிலிருந்தும் அந்தநிலையை மாற்ற தங்கள் பொய்யாமொழி முன்வந்து முற்போக்கில் செல்ல வழிகாட்ட வேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன். மற்றும் நம் நாட்டில் நடக்கும் அயோக்யத்தனங்களையும், லஞ்ச ஊழல்களையும், கள்ள மார்க்கட் விடயங்களையும் ஆணிவேர் முதலாக அறுத்து நல்ல நிலைமையில் கொண்டு வர வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

ஃ ஃ ஃ

V. S. தர்மராசு,
திராவிடகழகம், தலைவர்
கண்டியூர்.

உயர்திரு பொய்யாமொழி ஆசிரியர் அவர்களுக்கு கண்டியூர் V. S. D. வாழ்த்துத்தாள் வணக்கம், நம் நாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்டாக முயற்சி என்னும் ஏருல்உழுது பாசரை என்னும் பரம்பில் இருந்து பகுத்தறிவு என்னும் விதைவிதைத்து உணர்ச்சி என்னும் தண்ணீரைபாய்ச்சி கற்பகம் சூழ்ந்த கதிரை அறுத்து கலக்கணக்கில் சரமாரி பொழியவும் சூழ்ச்சி சூது சுகம் வஞ்சகசுயநலக்காரர்களை சூனியம் என்று எடுத்துக்காட்டி பொதுநலத் தொண்டனுக்கு வழிகாட்டியாக விளங்கும் உமது நீண்ட நாளாக எதிர்பார்த்த பொய்யாமொழி நீடூழி வாழ்க என வாழ்த்துகிறேன்.

விளம்பர விகிதம்

—:—

வெளிக்கவர் முழுபக்கம்	ரூ.	40
அரைப்பக்கம்	ரூ	25
ஒருபத்தி ஒரு அங்குலம்	ரூ.	3
உள்பக்கம் முழுப்பக்கம்	ரூ.	30
அரைப்பக்கம்	ரூ.	20
ஒரு பத்தி ஒரு அங்குலம்	ரூ	2
குறைந்த விகித கட்டணம்	ரூ.	2—8—0

நீண்டகாலம் அதிக அங்குலம் எடுத்துக்கொள்பவர்களுக்கு விசேஷ சலுகை உண்டு. நேரிலோ தபால் மூலமோ எழுதவும். (முன் விகிதங்கள் ரத்து)

மகாபாரதம்.

வில்லிதரும் விளக்கம்.

(U. S. ராமசாமிப் பிள்ளை)

★

இதிகாசங்களில் ஒன்ருகிய பாரதத்தை தமிழில் காவியமாகச் செய்தவருள் வில்லிப்புத்தூராரும் ஒருவர் அவர் இயற்றிய பாரதநூலின் தொடக்கத்தில் விநாயக வணக்கமாக இரண்டுசெய்யுட்கள்கூறுகின்ருர் அவற்றுள் முதலாவது செய்யுள்.

"நீடாழி யுலகத்து மறைநாலோடைந்தென்று நிலை நிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதஞ் சொன்னநாள்
ஏடாக மாமேரு வெற்பாகவங் கூரெழுத்தாணிதன்
கோடாக எழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ"

என்பதாகும்,

(இதன் பொருள்) நீடு ஆழி—நெடியகடல் சூழ்ந்த, உலகத்து—பூமியில், மறை—வேதங்கள், நாலோடு—நான்கினேடு ஒப்ப, ஐந்துஎன்று—ஐந்தாம்வேதம்என்று சிறப்பித்து கூறும்படி, நிலைநிற்க—அழியாமல் இருக்க வாடாத—சோர்வில்லாத, தவம்—பற்றுநீங்கிய வழிபாட்டையும், வாய்மை—உண்மையையும் உடைய, முனிராசன்—முனிவர் தலைவனுகிய வியாசமுனிவன், மா—யாவரும் மேன்மையாகக்கருதி பூஜிக்க தக்கமேம்பாட்டையுடைய, பாரதம்—பாரதகதையை, சொன்னநாள்—கூறிய காலத்து. மாமேருவெற்பு—மகாமேருமலையை, ஏடாக—எழுதும் ஏடாகவும், ஆகவம்—கஜமுகாசுரனுடன் செய்தபோரில், கூர்—மிகுதியும் பயன்பட்ட, தன்கோடு—தன்னுடைய வலக்கொம்பை, எழுத்தாணியாக—ஓலையில் எழுதும் கருவியாகவும் கொண்டு, எழுதும்பிரானை—எழுதியதலைவனுகிய விநாயகனை, பணிந்து—வணங்கி, அன்புகூர்வாம்—அவனைப்பற்றுடன் விரும்புவோம். (எ-று)

(இதன் பொழிப்பு) நெடியகடல் சூழ்ந்த பூமியில் வேதங்கள் நான்கினேடுஒப்ப ஐந்தாம் வேதம்என்று சிறப்பித்துக்கூறும்படி அழியாமலிருக்க, சோர்வில்லாத பற்றுநீங்கிய வழிபாட்டையும் உண்மையையும் உடைய முனிவர் தலைவனுகிய வியாசமுனிவன்யாவரும் மேன்மையாகக்கருதிப் பூஜிக்கத்தக்க மேம்பாட்டையுடைய பாரத கதையைக்கூறியகாலத்து மகாமேருமலையை எழுதும் ஏடாகவும், கஜமுகாசுரனுடன் செய்தபோரில் மிகுதியும் பயன்பட்ட தன்னுடைய வலக்கொம்பை ஏட்டில்எழுதும் கருவியாகவும்கொண்டு எழுதிய தலைவனுகிய விநாயகனை வணங்குவாம் என்பதாம்.

குறிப்பு:— உலகிலேயே சிறந்தநூல்கள் வடமொழி நான்கு வேதங்கள் என்றும், அவற்றிக்கு மேம்பட்ட நூற்கள் ஒன்மில்லை என்றும் ஆசிரியர்வில்லி கருதினர் போலும் மறைஎன்பது வடவர்க்கு உரியதொருநூல். அதிற்கூறப்படுங் கருத்துக்களைப்பிறர் அறியப் புகுவதற்கோ பிறர்க்கு அறிவிப்பதற்கோ கூடாமல்மறைத்து வைக்கப்பட்டதொரு இரகசியநூலாகும். அத்தகைய நூலோடு சமமாகக்கூறத்தக்க மேம்பாடும், மக்கட்கு நன்மை தரத்தக்க கருத்துகளும் பாரதநூலில் என்ன இருக்கும் என்பது ஆராய்ந்து சிந்திக்கற்பாலது, அன்றியும் வியாசன் மனிதன். விநாயகன் கடவுளாகக் கருதவேண்டியபிரணவவடிவம் வியாசன்கூற விநாயகன் எழுதினன் என்ருல் வியாசனுக்கு மேம்பாடும் விநாயகனுக்கு ஏவலுக்குரிய தாழ்வும் ஏற்படஏதுவாகிறது ஆகவே விநாயகனின் இறைத்தன்மைக்கு வியாசன் மதிப்புத்தந்தானில்லை, வியாசனைப்பற்றி ஆராயுங்கால் அவனிடம் உயர்ந்தபண்பாடு சிறிதும் இல்லைஎன்பது பின்வரும் வரலாற்ருல் புலப்படும். அத்தகையனுல் கூறப்படும் நூலில் உயர்ந்தகருத்துக்களோ, அதைப்பயின்று பின்பற்றுபவர்களுக்கு மக்கட்பண்பாடுகளோ உண்டா என ஆராய்தற்குரியது.

[தொடரும்]

ஆசிரியர் குறிப்பு:— ஒன்றேகுலம் ஒருவனேதேவன் என்ற உயர்ந்த பண்புடைய தமிழ்நாட்டுமக்களிடம் ரிஷிகளுக்குந் தொண்டு செய்ய விநாயக கடவுளைப்படைத்துள்ளதாக மேற்கண்ட செய்யுளால் புலப்படுகிறது. கருத்துக்கு ஒவ்வாவிடினும் எழுதப்பட்டது விநாயகர்.

வியாசன் (வியாசபகவான்) என்றழைக்கப்படுவதும் அறிதற்பாலது.

பட்டினி...! பசிக்கொடுமை...!!

ஜெயங்கொண்டம் உணவு பங்கீட்டு வியாபாரிகள் தங்களுக்கு கொடுக்கப்படும் உணவு தானியங்களை ஒருசிலருக்குமட்டும் கொடுத்து சிலருக்கு கொடுக்காமலிருப்பது என்ற புகார் வருந்தத்தக்கது. இனி மேலாவது வரும் தானியங்களை கார்டு வீதாசாரம் பிரித்து சமமாய் பங்கிடு செய்வார்களென எதிர் பார்க்கப்படுகிறது. —ஆசிரியர்

வேண்டுகோள். ★★★★★★★

மோட்டார் பஸ் சர்வீஸ், லேபராக்ட்டு ('49 மே.) பின்னர் திருத்தவேண்டிய விஷயங்களும் நமது முன்னாள் டிரைவரும், மோட்டார் மெக்கானிக்கும், பொய்யாமொழி வார இதழின் ஆசிரியருமான திரு. M. பாஸ்கரனர் அவர்கள் தமது பத்திரிகையில் தொடர்ந்து 18—10—50 முதல் வெளியிடப்போகிருர் ஆகையால் ஆங்காங்குள்ள மோட்டார்த்தொழிலாளிகள் அனைவரும் வாங்கி படித்து உணர்ந்து, தங்கள் தங்கள் கருத்துக்களையும் ஷியாருக்கு எழுதியும், நம் முன்னேற்றத்திற்கு உழைக்கும் பத்திரிகையை ஆதரித்து வரும் செய்திகளைப் பார்த்து நன்மை அடைய கேட்டுக்கொள்ளுகிறேன்.

S. கிருஷ்ணமூர்த்தி,
டிரைவர், & மோட்டார் மெக்கானிக்,
அரியலூர்.

★★★★★★★★★ ★★★★★★★★

பொய்யாமொழி
ஆசிரியர்-ம.பாஸ்கரனுர்

கதிர் 1 } 1981, புரட்டாசி 25 புதன். { மணி 7

" தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது "

தறைபாடுகளைகொண்ட கவலையுடையவன்-நிறைத்தன்மையுடைய தலைவனைப் பின்பற்றவிடில் மனக்கவலையை நீக்க இயலாது.

மனிதனும் - விஞ்ஞானமும்

★

மனிதயினம் அறிவுவளர்ந்து கல்தோன்றி மண்தோன்ரு காலமுதல் மரஉரி தரித்து ஆடை தரிக்கவும் ஆண்குறி பெண்குறி மற்றைய மர்ம இடங்களின் எண்ணம்தோன்ருமல் செடி கொடி கட்டி மறைக்கநினைத்த நாள் தொடங்கி கற்கால முதல் அம்பு, வில் ஆயுதந்தொடங்கி அணு குண்டும், ஹைட்ரோஜன் குண்டும் அதற்கப்பால் வேண்டிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு இருக்கும் அயல்நாட்டாரையும் அவர்களின் மேன்மையான வளர்ச்சியையும் பஞ்சம், பசி, பட்டினியை வெருட்ட இயற்கை சக்திகளைக்கொண்டு விஞ்ஞானத்தால் மழையை கூப்பிடுவதுபோல் மழையை பெய்யவைப்பதும் ஒரு நகரம் பூருவும் ஒரு பொத்தானையழுத்தினுல் எரிந்து இருளை ஓடிஒளியச்செய்ய வாய்ப்புபெற்றஇந்தநேரத்தில் நாமும் நம் நாடும் எந்நிலையில் இருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்கும்போது விஞ்ஞான வளர்ச்சியில் பிந்திக்கொண்டு பல்லாயிரம் அடியின் கீழே நிற்கிறோம்.

ஒரு பொன்னுற்று வாய்க்காலை பொன்னேரிக்கு பாய்ச்ச வேணுமென்ருல் லெவல் சரியில்லை மேடாக இருக்கிறது என்பதும் தொழுதூர், பிலாந்துறை அணையில் பிரிக்கலாம் என்ருல் லெவல் எப்படி இருக்குமோ என்று ஐயங்கொள்ளும் காலத்தில், நாமும் நம்முடைய எதிர்கால ஆக்க இளைஞர்களும் எப்படி இனிது வாழ இயலும்?

Sifen சைபன் பிரின்சிபிள் தெரிந்து இன்ஜினீரிங் பாஸ் செய்தவர்கள் ஏழைகளின் வரிபணத்தில் ஆயிரக்கணக்கில் சம்பளத்தை வாங்கி விழுங்கி ஏப்பமிட்டுக்கொண்டிருக்க ஏருத மேட்டுக்கு சைபன் முறையில் எலக்ட்ரிக் கரண்டைக்கொண்டு பம்பு வழியாய் மேலேபாய வேண்டிய இடத்துக்கு ஒரு அங்குலம் வரை உயர்த்திஞல் போதுமானபடி பாயச்செய்ய முடியாதா, ஏன்? வீணுக பெரிய பெரிய நகரங்களில் மின்சார விளக்கை பகல்போல் எரித்துக் கொண்டு கிராமங்களை இருட்டில் விஷப்பூச்சிகளிடை தள்ளிவிட்டு பலப்பல சினிமாக்களுக்கு வேண்டிய எலக்டிரிக் கரண்ட்டுகளை வீணுக சில வழித்துக்கொண்டு இருக்கவிடுவானேன்? அவர்களை இன்ஜின் வைத்து எலக்டிரிக் கரண்ட்டுக்கு கிராமாந்திரங்களில் நடத்துவதுபோல் நடத்திக் கொள்ள வழி செய்தால் செய்து கொள்ள மாட்டார்களா என்று எண்ணுமல் கிராமவாசிகளின் கஷ்டநிலையறியாது கிராமவாசிகளின் விவசாயத்திற்கு மின்சாரத்தேவையையும் குடிக்க குளிக்க உணவுக்குவேண்டியதண்ணீர்சப்ளைக்குவேண்டிய வழி வகைகள் பல இருந்தும் ஒவ்வொரு திட்டத்திற்கும் எந்ததிட்டமானுலும் சிலவுசெய்தால் சிலவில் பாதியை ஒத்துக்கொள்ள விவசாயிகள் தயாராய்முன் வந்துள்ள இந்தநாளில் 1908ம் ஆண்டில் ஒரு இன்ஜினியரால் துறையூருக்கு மேற்கே ஒரு அணைகட்டி அது சம்பந்தமுள்ள மலைத்தண்ணீரை தேக்கினுல் 320 அடி உயரம் தண்ணீர்த் தேக்கமும் அதைக்கொண்டு மேட்டூர் அணையை விட $2\frac{3}{4}$ பங்கு தண்ணீர் தேங்கும் வசதியும் எலக்டிரிக் கரண்டுக்கு வேண்டிய டைனமோக்கள் வைத்து கரண்ட்டுகளுட் உற்பத்தி செய்ய வசதியிருந்தும் கிட்டத்தட்ட திருச்சி ஜில்லாவில் முசிரி, பெரம்பலூர், உடையார்பாளையம், தென்னுற்காடு ஜில்லாக்களில் விருத்தாசலமும் அடுத்த மற்ருெரு தாலூகா வரை தண்ணீர் பாய்ந்து எமனேரியில் களர் ஏற்பட்டு அந்த தண்ணீர் களரால் விருத்தாசலம் போன்ற இடங்களின் நிலங்களில் களர்ஏற்படுவதுடன் நிலங்களும் வீணுகிவிடுமோ என பயம் ஏற்படாமல் எக்காலத்தும் கிட்டத்தட்ட பார்க்க திருச்சி ஜில்லாவில் காவிரி நீர்ப்பாசனமுள்ள இடங்களைப்போலாய்விடும் என்ற வாய்ப்பு பெற்றிருந்தும் கவனியாமலும், பற்ருக்குறை ஜில்லாக்களுக்கும் தண்ணீர் வசதி செய்து உண்ணும் உணவு பொருள் தட்டு ஏற்படாமல் செய்வது முதற் கடமையாகக் கொள்ளலாமே யொழிய 1951 ஆண்டுக்குள் பின் எப்படி உணவு

தேவையை பூர்த்தி செய்யமுடியும்? ஆவன செய்யுங்கள்.

பட்டாளமும் வரிப்பணமும் அனுக்குண்டு, ஹைட்ரோஜன் குண்டுகளால் ஒருநாட்டை மற்றொரு நாடு சண்டையில் வீழ்த்த எண்ணும் இந்நாளில் நம் நாட்டில் பட்டாளத்தின் பராமரிப்புக்காக வரியில் பாதி 168கோடி ரூபாயை சிலவு செய்வது யாதுபயனை யளித்துவிடும்என்று எண்ணுகிறீர்கள். இந்நாட்டு மக்கள் சுதந்திரமாய் சுகவாழ்வு நடத்தும் நிலையும் வேலையில்லா திண்டாட்டமும் ஒழிய வேண்டிய வகையில் மக்களின் நலனில் அக்கரைகொண்டுவறுமையில் வாட்டமடையாமல் ஏழ்மையைஒழித்து மக்களை உற்சாகமூட்டுமளவில் சுதந்திரத்தில் சுகவாழ்வை நிர்மாணிக்கவேண்டிய வழிவகைகளைசெய்யும் முழுநோக்கமும். ஆட்சிபுரியும் நம்மவர்களுக்கு ஏற்பட்டுவிடுமேயானால் வேறு எந்த நாட்டாரும் இந்நாட்டை கைப்பற்றி ஆளவும் முடியாது சுகபோகத்தையடைந்தமக்களும் அதற்கு இடமளிக்க மாட்டார்கள். அவ்வளவு செய் நன்றி கொன்றவர்களல்ல. முன்னொருகாலத்தில் வரிகொடா இயக்கம் ஆரம்பிக்க எண்ணி செய்வகையில் மக்களை ஊக்குவித்து நம்வயப்படுத்தினோம் இன்னும் நம்முடையநாட்டு மக்களின் வறுமைப்பிணியைநீக்க நமது மகாத்மாகாந்தியடிகளின் முதல் சீடருனவரும் நிலையைநன்கு உணர்ந்தவரும் அஹிம்சாதத்தவ முறையில் ஏழைகளின் வாழ்க்கையை செம்மைபடுத்துவதில் அக்கரைகொண்ட நமது இந்தியாவின் ஏகப்பிரதமர் அருமை முதல் அமைச்சர் பண்டிட் ஜவஹர்லால்நேருஅவர்கள் தெரிந்துகொண்ட உண்மையான மறுக்கமுடியாத எல்லாச்செல்வங்களுக்கும் மூலமாயிருப்பது உழைப்பு. ஆனால் லக்ஷக்கணக்கான மக்களுக்கு உழைக்கும் சக்தியை தவிர்த்து வேறெவ்விதமான மூலதனமுமில்லை.

பணக்காரர்கள் எல்லாவிதமான சலுகைகளையும் அனுபவிக்கிறார்கள் உழைப்பாளிகளோ ஒன்றுமில்லாதவர்களாயிருக்கிறார்கள் இருவருடைய நலன்களும் நேர் விரோதமானவை இதனால் இவர்கள் எப்போதும் போராடிக்கொண்டே யிருக்கவேண்டியிருக்கிறது. பணக்கார வியாபாரிகளுடைய நிலைமை எவ்வளவுக்கெவ்வளவு அபிவிருத்தியடைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு எதிராய் உழைப்பாளிகளின்நிலைகேவலமடைந்துவருகிறது நம்நாட்டில் நாம்காண்பதெல்லாம் தொழிலாளிசெய்தான் அவன் காணுவது முழுதும்வருமையே ஆனால் அடைய வேண்டியது பொறுமையே. எனில்பத்தும் பசிவந்திட பறந்துபோம் என்பார்களே, அந்நிலையில் முதலாளிகள் கொடுங்கோன்மை ஏழைகளின் கண்விழிப்புக்கு இலக்காகாமல் மக்களின் உணவு உடை போன்றதும் அதற்கு மூல ஆதரவாயுள்ள வேலையில்லா திண்டாட்டத்தையு மொழித்து நல்வாழ்வுக்கு வழிகோலுவீர்களானால் எந்த நாட்டு எதிர்ப்பாலும் நம்நாட்டை அடிமைப்படுத்த முடியாது.

வாழ்க பொதுநலம்...! வீழ்க சுயநலம்...!

நாடு நமதே!

★

கசங்கிய, கிழிந்த கரன்சி நோட்டுகளும் மக்களின் அவதியும்.

—:—

நமது சர்க்காரிலே முன்னால் போடப்பட்ட கரன்சி நோட்டுகள் அப்பொழுது போடப்பட்டிருப்பதையே பழக்கத்தில் விட்டு வைத்து மேற்கொண்டு புதுமாதிரி தலைகள் முத்திரையிட்டுவந்து கொண்டிருக்கிற இந்த வேளையில் ஆங்காங்கு கிராமவாசிகளும் ஏனைய மற்றயவர்களும் கிழித்தும் அழுக்கு ஏற்பட்டும் அதனால் எண்ணைபட்டது போன்று தெரியக்கூடிய கரன்சி நோட்டுகள் ரூ. 1 முதல் 10 ரூ. நோட்டுகள்வரை ஏராளமான அழுக்கடைந்து கிழிந்துபோன கரன்சிநோட்டுகளை மக்கள் வைத்துக்கொண்டு அவதிபடுகிறார்கள் அதிலும் குறிப்பாக 90 சதவிகித மக்கள் பிறரிடம் நோட்டுகளை கொடுக்கும்போது பழய நோட்டுகளையே கொடுப்பது சர்வசாதாரணமாய் பழக்கத்திலே கொண்டுவிட்டார்கள் அதைவாங்கியவர்கள் இந்தியா ரிசர்வ் 'பேங்கில் போய் மாற்றுவதற்கு ஆக கமிஷன் (தரகு) 0—2—0, 0—4—0 0—8—0. 1—0—0 கொடுத்து மாற்றுவதும் சில சமயங்களில் மாற்றுவதற்கு முடியாமல் அவஸ்த்தை படுவதுமாக இருக்கிறார்கள் அதை சர்க்கார் போஸ்டாபீஸ், சப்ரீ ஆபீஸ்கள் போன்ற இடங்களில்கூட வாங்காமல் திருப்பி விட்டுவிடுகிறார்கள் அவர்கள் ஏன் வாங்கமறுக்கிறார்கள் எனில் கஜானாவில் எடுக்காமல் கழிப்பதாலோ என்னவோ எது எவ்வாறாயினும் அழுக்கேறி கசங்கி மடிப்பினால் கிழிசல் ஏற்பட்டுள்ள கரன்சி நோட்டுகளை சர்க்கார் பணிமனைகளில் வாங்கிக் கொண்டு பதிலுக்கு புதிய கரன்சி நோட்டுகளை வெளியில் பழக்கத்துக்கு விட்டு ஏழைகளுக்கு சங்கடம் ஏற்பட்டு அவதியுறும் நிலையை உடனே நிவர்த்தித்து ஆங்காங்குள்ள பேங்குகளிலும் கஜானாக்களிலும்வாங்கி அதற்குப்பதிலாக புதிய நோட்டுகளை வழங்கச்செய்ய வேணுமாய் அரசாங்கத்துக்கு எடுத்து காட்டி ஆவான செய்யும்படி கேட்டுக்கொள்ளவேண்டியது அவசரமும் அவசியமுமாகிறது.

தொழிலாளி வாழ்த்துகிறார்.

ம. குழந்தைவேல்,
காரியதரிசி, மோட்டார் போக்குவரத்து
பொது தொழிலாளர் சங்கம் பெரம்பலூர். 7—10—50

பேரன்புமிக்க ஆசிரியர் அவர்களுக்கு.

வணக்கம்

திசை தப்பிப் போன கப்பலின் மாலுமிக்கு ஓர் திட்டகப்பட்டது போல் நம் தமிழ்நாட்டில் சிரழிந்து சிதறிக்கிடக்கும் தொழிலாளர்களுக்கு தங்கள் பொய்யா மொழியைக் கண்டு பெரிதும் வரவேற்கிறோம்.

தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்கு பெரிதும் பங்கெடுத்து உழைத்து சீரும், சிறப்பும் பெற்று விளங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

உ. தா. நூல் வியாபாரிகள் சங்க கூட்டம்.

6—10—50 மாலை 3 மணிக்கு ஜெயங்கொண்டம் R. M. S. கடையில் வியாபாரிகள் சங்கத்தலைவர் R. சுந்திரமய்யங்கார் அவர்களால் முன்மொழியப்பட்டு S. சாமிநாதமுதலியார் அவர்களால், வழிமொழியப்பட்டு உ, தா. டெக்ஸ்டைல் இன்ஸ்பெக்டர் அவர்கள் தலைமை தாங்க கூட்டம் தொடங்கியது. வியாபாரிகள் 32 பேர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்

தீர்மானம். 5.

A. C. T. O. அவர்கள் தங்களிடம்வரும் வியாபாரிகளை கண்ணியமாய் நடத்த வேணுமென்று கேட்டுக்கொள்வதோடு இத்தாலுக்கா வியாபாரிகளுக்கு சென்டரான ஜெயங்கொண்டம் முகாமிலேயே கணக்குகளை பரிசிலனை செய்ய வேணுமென்று இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

தீர்மானம். 6.

உ. தா. கைத்தரி நெசவாளர்களுக்கு தரி 1-க்கு 20 முதல் 40 வரை நம்பர் நூல் 30 பவுண்டு நூல் விதமும் 60 முதல் 80—100 தரிகளுக்கு 15 பவுண்டு விதமும். மாதக்கோட்டா கிடைக்கும்படி கொடுக்க வேணுமாய் இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது

நூல் வியாபார சங்கத்தலைவர் R. சுந்திரமய்யங்கார் அவர்களால் நன்றிகூறலுடன் கூட்டம் இனிதுமுடிந்தது.

கைத்தரி நெசவாளர்களுக்கு ஏற்படும் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் 10—20 வரையுள்ள நம்பர் நூல்களில் 3 அகலம் சுத்தமும் 4 முழம். 4½ முழம் வேஷ்டிகளும் ஷெ சங்கங்களில் சல்லாவாக கரையின்றி சட்டைக்கு ஆக உதவும்படி பிஸ்களையும் கால்நெருக்கமாயும் அதுபோல் 80, 100 முதலிய வேஷ்டிகளும் 5முழம் பஸ்காணு துண்டுகளும் அடுத்துகிடைக்கபோகும் நூல்களைக்கொண்டு கூடியவரை தென்னாட்டு மக்களுக்கு உடைதந்துதவும் வாப்பை சொசைடடிகளும், மாஸ்டர் வீவர்களும் தயாரித்து பயனடைய வேணுமென்று கூறுகிறோம்.

தவிர ஏனைய பொதுமக்களும் நம் நாட்டு நலனில் அக்கரை கொண்டவர்களும் பொருளாதார துறையில் வடநாடுயர்ந்து தென்னாடு தாழ்ந்துவரும் நிலையை ஒவ்வொருவரும் மனதிலெண்ணி நம் நாட்டு கைத்தரித் தொழிலாளர்கள் பஞ்சம் பசி பட்டினிக்கொடுமையால் வாடும் சக உழைப்புத் தொழிலாளர்களின் தயாரிப்பான கைத்தரித்துணியை ஆதரிக்கவேணும். விவசாயிகளின் உணவுப் பொருள்களையே தென்னாட்டு தொழிலாளர்கள் வாங்கி உபயோகித்து வருவதினிமித்தமாவது நாம் தென்னாட்டு கைத்தரி துணிகளையும் ஓரளவாவது நாட்டு மில் துணிகளையும் ஆதரித்து தென்னாடு பொருளாதாரத்தில் பிற்போக்கடைந்துவரும் தென்னாட்டின் பள்ளத்தை தூர்த்து வருவோகமாக கைத்தரித் தொழிலாளிகள் குடும்பம் குடும்பமாய் பிச்சை எடுத்து வருவதுகண்டும் நாம் கவனியாமலிருப்பது நியாயம் நேர்மை அன்புடைய காரியங்களாகாது. நாட்டுடையில் நாட்டங்கொள்ளுங்கள் மில் துணியைவிட கைத்தரித்துணி நீடித்துஉழைக்கக்கூடியது அனுபவித்து உண்மையை உணர்வீர்கள்.

—ஆசிரியர்

கன்னியப்பன்

குடந்தை. கு. ஆண்டியப்பன்.

—:—

அழகிய நஞ்சைகள்—புஞ்சைகள் அடர்த்தியான தோப்புகளும், ஆங்காங்கே குட்டைகளும், குளங்களும் நிறைந்து இயற்கை எழில்புரியும் ஊராக இருந்தது பேரூர் கிராமம். சிற்றூர் ஆயினும் இயற்கை வாணியின் எழில் நின்று நிலவியது. நடுவிலே ஊர், சுற்றிலும் தோப்புகள், நீங்காத நிழல்தரும் மரங்கள் கிளைற்றிலே நீந்தி விளையாடும் கிள்ளை மொழி பேசும் பிள்ளைகள் இத்தனையும் அமைந்திருந்தன. மாலை நேரங்களிலே மிகவும் அழகாக மனதையே மடக்கி தன் வசம் இழுக்கும் முறையிலே திகழும் பேரூர், ஊட்டி கொடைக்கானல் எல்லாம் இவ்வூரிடம் பிச்சை வாங்கவேண்டும், அப்படி வீசும் இளந்தென்றல் இவைகள் எல்லாவற்றையும் விட பேரூர் மக்களால் மிகவும் போற்றப்படுகிற "பேரூர் பத்ரகாளி" கோவில் மிகச்சிறந்தது. எங்கும் இக்கோவிலின் பெருமையை பேசாதார் கிடையாது. 'உக்ரமான தெய்வம்' உறுதியோடு வணங்கினுல் உண்மையாகக் காப்பாற்றும் என்றெல்லாம் புகழ்வார்கள் பொதுமக்கள் பத்ரகாளியின் கோவிலுச்கு பக்குவமான புகழை—நிலையை—தேடித்தந்தவர் பரமசிவம் பிள்ளை பேரூரின் பெரும்பணக்காரர். இரக்கம் உள்ளவர் மனைவியிடத்தில்—ஏழையிடமல்ல. ஆளைப்பார்த்தாலே ஏழையை விரும்பாதவர் என எளிதில் கூறிவிடலாம் அப்படிபட்ட ஒரு பயங்கர தோற்றம், இரக்கம், ஈவு இரண்டுமற்ற அகங்காரப் பார்வை "உங்களை எல்லாம் உருட்டி விடுகிறேன்" என உறுதி கூறும் உருண்டைக் கல்கள். நீண்ட மீசை பொருத்தமற்ற பெருத்த உடல் உடலுக்கும் வயிறுக்கும் சம்மந்தமில்லாது நீண்டுசுருண்டு உருண்டையாக உடம்பில் தொங்குகிற தொந்தி அப்பப்பா! அகோர காட்சிதான்.

கட்டான உடலும், கனிவான பார்வையும், அன்பு தோய்ந்த முகமும் கொண்டவள்தான் பாக்கியம். பரமசிவத்தின் பாரியாள். பச்சைப் பசுங்கிளிபோன்ற உடல் அவள் விழியாலே மொழி பேசும் விநோதினி எவரிடமும் வெட்டிப் பேசும் வெட்டுக்கிளி. பாவையருக்குண்டான பண்புகள் அமைந்த அன்புக் கனி.

கணக்கிடமுடியாத காணி. கூப்பாடு போடுமுன்னே குனிந்து முன் நிற்க குவிந்து கிடக்கும் ஆட்கள். ஆங்கு கொட்டிக் கிடக்கும் பணம். எல்லாமிருந்தும் ஒரே ஒரு குறைதான் பரமசிவம்—பாக்கியம் இவர்களுக்கு. ஆமாம்! பெரிய குறை...!! நிம்மதியைக் கலைத்து, சங்கடத்தைத் தரும் வேதனைக் குறை.. !!! அவர்கள் உள்ளத்தை விட்டு நீங்காத நீண்டதோர் சோகக் குறை...!

—தொடரும்

குற்றமா ...?..!

அ. க. கே. இரசூல்.

[சென்ற வார தொடர்ச்சி]

நாலைந்து ஆண்டுகளுக்குமுன் நானும், கமாலாவும் உறுதிகொண்டோம் அதாவது நாம் இருவருமே திருமணம் செய்துகொள்வதாக; அதேநேரத்தில் என் தாய் இருந்தாள் என்தந்தை வயோதிகர் ஆகையால் தன் தம்பியின் ஆதரவில் இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது எனக்கு திருமணம்செய்ய எண்ணி என் தந்தை தன்தம்பியிடம் கருத்தை தெரிவித்தார். அவர் தன் மனைவியிடம் தெரிவிக்க, என் சிற்றன்னை தன் அண்ணன்மகளை எனக்கு மணம்முடிக்க ஏற்பாடு செய்தார்கள். நான் மறுத்தேன் கேட்கவில்லை வேதனை தாளமுடியாதநான் பட்டாளத்தில்சேர்ந்தேன்... பிறகு இரண்டாண்டுகள் கழித்து வீடுதிரும்பினேன் என் தந்தை இறந்ததைகேட்டு தவித்தேன்—மீண்டும் அப்பெண்ணையே, மணக்கும்படி பிடிவாதம் செய்தார்கள் முடியாதென்று மறுத்துவிட்டு வெளியேறினேன் வேலைக் கலைந்தேன், எங்கும் வேலைகிடைக்கவில்லை; சொந்தத்தில் ஏதாவதொரு தொழிலை செய்யலாமென்றாலோ கையில் பணமில்லை, என்னசெய்வதென்று தெரியாமல் திகைத்துக்கொண்டிருந்தேன்.

அப்போது கோவிலில் கொட்டிக்கிடக்கும் பணத்தை பயன்படுத்துங்கள்; என்று, யாரோசொன்னது நினைவுக்கு வந்தது. உடனே கிளம்பிலேன் அன்னையின் ஆலயத்தைநோக்கி அப்போது இரவு 11மணி இருக்கும் சுற்றுமுற்றும் பார்த்தேன் ஒருவருமில்லை, உள்ளே நுழைந்தேன் காரிருள் கண்ணை மறைத்தது, பையிலிருந்த தீப் பெட்டியை எடுத்து ஒருகுச்சியை கிழித்தேன், அருகாமையில்இருந்த மாடத்தில் அகல் இருப்பதைக்கண்டேன் அகலை ஏற்றி கையில் எடுத்துக்கொண்டு அன்னையை அணுகினேன். அங்கு என்காதலி கமலா! இருப்பதைக்கண்டு திகைத்தேன். என்னை கண்டதும் "மோகன்!" என்று, ஓடிவந்து என்னை கட்டி அணைத்துக்கொண்ட அவள் உடல் நடுங்கிக்கொண்டிருந்ததை அறிந்த நான் என்னவென்று வினவினேன் நடந்ததைக்கூறி கண்ணீர் வடித்தாள் கமலா அவளுக்கும் மனதிடத்தைகூறி—நான்வந்த காரியத்தையும்முடித்து கமலாவையும் அழைத்துக்கொண்டு தில்லிமாநகரை அடைந்தேன். வைர அட்டிகையை அடகுவைத்து ஆயிரம்ரூபாய்பெற்று கைமுதலாக கமிஷன் வியாபாரம் செய்தேன். ஒரேஆண்டில் அட்டிகையை திருப்பி, யாரிடம் வாங்கிக்கொண்டு சென்றேனோ! அவள்வசமே திருப்பிகொடுத்துவிட்டேன் பிறகு மாதங்கள்பல கழிந்தன எங்கள் இருவர் இன்ப வாழ்வில்; செல்வன்! பிறந்தான்—செல்வன்பிறந்த சில மாதங்கள்கழித்து என்சிற்றப்பா இறந்ததாக தந்தி...! என் தாய்மாமன் தர்மலிங்கம்பிள்ளையால் கொடுக்கப்பட்டது என்பதை அரிந்தேன். உடனே, ஊர் திரும்பினேன் கமலாவையும் அழைத்துக்கொண்டு, வரும் வழியில், "ஊர் சென்றவுடன் முதலியார் கண்ணில் பட்டால் என்னநடக்குமோ! என்று பயந்தாள் கமலா. கவலைக்கொள்ளாதே; சட்டப்படி நாம் திருமணம்செய்துகொண்டிருக்கிறோம். என்று, அவளுக்குசாமாதானம் கூறினேன். ஊர்வந்தடைந்தோம் செய்யவேண்டிய காரியங்கள்எல்லாம் செம்மையாக நடந்துகொண்டிருக்கும்போதே; கைது செய்யப்பட்டேன். தன் தம்பிமனைவி தாலிஅறுந்து வீட்டிலே வதிய, தங்கைமகளை தாலிகட்டத் துணிந்தார் முதலியார்! காடுவா வா! வீடுபோ போ! என்கிறது இந்தவயதில், "கல்யாணம் கொள்ளவேண்டும் என்று இவர்மனம் எப்படித்துணிந்தது? அதுவும் ஒரு இளம்மங்கை!

தன் தங்கைமகள்! தன்தங்கைமகள் வாழ்நாள் வீணாகுமே! என்றுகூட பாராமல் திருமணம்செய்துக் கொள்ளமுயன்றார் காரணம் பணத்தின்பெருமைதானே? இப்போது சொல்லுங்கள்! இவர் தன்வயோதிக நிலையில் திருமணம் செய்துகொண்டது சரியா முறையா? நீதிபதி அவர்களை கேட்கிறேன். இது நீதியா? குழந்தைபிறக்க வேண்டுமென்றெண்ணி கமலாவை அன்னையின் ஆலயத்தில் அடைத்தார் முதலியார்—நான் எந்தஆலயத்திற்கு சென்றேன்? எந்த ஆலயத்தில் அடைந்தேன்? எனக்கு மட்டும் எப்படி குழந்தை பிறந்தது? ஸீற்க கமலா இருபத்தைந்துபவுன் நகைபோட்டிருந்ததாகநம்பப்படுகிறது ஏன்—! ஐந்துபவுன் நகை இருந்திருந்தாலும் போதுமே நான் அம்பாளின் அட்டிகையை கழற்றிக்கொண்டு போகவேண்டிய அவசியம்ஏற்பட்டிருக்காதே! இப்போது சொல்லுங்கள்! எனக்குறிய கமலாவை நான் அழைத்துச் சென்றது குற்றமா?...! நீதியின் நேர்மையிலே! உண்மையின் ஒளியிலே! உண்மைக்கருத்தின் உருவிலே! சொல்லுங்கள்! எனக்குரிய கமலாவை நான் அழைத்துச் சென்றது குற்றமா......?

-முற்றும்.

உடையார்பாளையம் தாலுகா

உணவு பங்கீடு சில்லரை வியாபாரிகள் சங்கம்.

ஷை சங்கத்தலைவர் 6—10—50ல் அரியலூர் ரெவின்யூ டிவிஷனல்ஆபீஸர் அவர்களை நேரில் சந்தித்து ஜெயங்கொண்டத்திலுள்ள உணவு நெருக்கடியை தெரிவித்ததன் பேரில், அவர் உடனடியாக பெரம்பலூரிலிருந்து 10 டன் அரிசி ஜெயங்கொண்டத்துக்கு அனுப்புவதாக வாக்களித்தார், இந்த அரிசி கிடைத்ததும் எல்லா ரேஷன் கடைகளுக்கும் அரிசி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

S. சிவசாமி பிள்ளை தலைவர்.
7—10—50.

நீங்கள் பொய்யாமொழியின்

★ ★ ★ சந்தாதாரரா..?

இல்லையேல் இன்றே சேருங்கள்!

செய்திகள்:

தா. பழூர் தி. மு. கழக கூட்டம்

தா, பழூர் செப்-1

1—10—50ந்தேதி மாலை இவ்வூரில் அறிஞர் அண்ணாதுரை, பெரியார் ஈ, வே. ரா. விடுதலைகுறித்து திராவிட முன்னேற்றக்கழக சார்பில் ஒரு பொதுக்கூட்டம் கடைதெருவு மைதானத்தில் நடைபெற்றது அதுபோது 5மணிக்கு தி.மு.க. இலட்சியக்கொடியையேந்தி இலட்சிய முழக்கத்தோடு பலமுக்கியவீதிகளை சுற்றி சைக்கள் ஊர்வலம் மைதானத்தில் வந்தடைந்தது தோழர் M. வேணுகோபால் முன்மொழிய தோழர் வேலாயுததாசன் வழிமொழிய K. N. இராமச்சந்திரன் தலைமைவகித்தார் தலைவர் அவர்கள் முன்னுரைக்குபிறகு தோழர் வேலாயுததாசன் தாளமுத்து—நடராசன் வேலாயுதத்தை பலிகொடுத்த இயக்கத்தை மறைக்கமுடியாது ஒரு அறிஞராம் அண்ணாவை வேண்டுமானால் சிறையில் அடைக்கலாம் அவர் ஆயிரம் அண்ணாக்களை உற்பத்திசெய்துவிட்டாரே அதற்கு என்னசெய்வீர்கள் ஆட்சியாளரே! என்றவாறு பேச்சைமுடித்தார்.

அடுத்து திராவிட நாட்டுபிரிவினை அவசியம் கம்யூனல் ஜி வோ. தி. மு க. நோக்கம் கொடிவிளக்கம் முதலியவைகளைகூறி V. இராசகோபால் S. இளங்கோ M. வேணுகோபால் ஆகியோர் அரிய சொற்பொழிவாற்றினார்கள் பிறகு அறிஞர் அண்ணா பெரியார் ஈ. வெ. ரா. ஆகியோரை குற்றவாளிகள் என்றவாறுகூறி விடுதலை செய்தமையை கண்டித்தும் விடுதலை செய்ததிற்கு பாராட்டியும் மறைமலை அடிகள் சேலம் கல்லூரி அறிஞர் இராமசாமி மறைவுக்கு அனுதாபம்காட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது இறுதியாக தலைவர் தன்முடிவுரைக்குபிறகு M. வேணுகோபால் நன்றிகூற கூட்டம் சுமார் 9½மணிக்கு முடிவுற்றது. ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது.

ஃ ஃ ஃ

குடந்தையில் குத்தூசியார்

—:—

வகுப்புரிமையும்-கழகப்பணியும்.

கும்பகோணம் செப்24

இன்றுமாலை 4மணிக்கு புகைவண்டி நிலயத்திலிருந்து தோழர் நமது இராமலிங்கம் அவர்கள் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு பல்முக்கிய தெருக்களின் வழியாக ஜூப்ளிபார்க்கை வந்தடைந்தது தோழர் குத்தூசி S. குருசாமி அவர்களால் பஸ் ஸ்டேண்டிலும் உப்புக்காரத்தெருவிலும் தி. கழக கொடியேற்றுவிழா நிகழ்ந்தது. மாலை 6-மணிக்கு அரைக்கரை தங்கராசு அவர்கள் இன்னிசையுடன் வழக்கறிஞர் P முத்துதனபால் B. A.B.,L. அவர்கள் தலைமையில் நீடாமங்கலம் தோழர் ஆறுமுகம் (த. மா. தி. க. தலைவர்) குடந்தை தோழர் நமது இராமலிங்கம் பாலைவனம் தோழர். A. துரையராசன் ஆகியோர் பெரியார் அவர்களை இன்றைய ஆள்வந்தார்கள் வகுப்புதுவேஷ குற்றம்சாட்டி 6மாத தண்டனைவிதித்திருப்பது குறித்து கண்டித்து பேசினார்கள். அடுத்து விடுதலை ஆசிரியர் குத்தூசி S. குருசாமி அவர்கள் “யார் பார்ப்பன துவேஷி” என்ற பொருள்பற்றி மறைந்த மறைமலையடிகள் எழுதிய “சாதிபாகுபாடும் போலிச்சைவமும்” நூலிலிருந்தும் வேளாள நாகரிகம் நூலிலிருந்தும் அபேடுபாய் என்ற பிரஞ்சு அறிஞர் எழுதிய இந்து பழக்க வழக்கங்கள் என்ற நூலிலிருந்தும் பல மேற்கோள்களைப்படித்துக்காட்டி பெரியார் அவர்களை விடுதலை செய்யும்படி ஆளவந்தார்களை கேட்டுக்கொள்ளுகிறது என்றதீர்மானம் நிறைவேற மக்களிடத்தில் தமிழரல்லாத கடைகளில் எதையுமே வாங்காமல் இருக்கவும் இந்து சுதேசமித்திரன் போன்ற பத்திரிகைகளை வாங்காமல் இருக்கும்படிக்கும் நிறைவேற்றப்பட்டது. சுமார் 2-மணிநேரம் சொற்பொழிவாற்றினார்கள் தலைவர் முடிவுரையுடன் உதவிசெயலாளர் S. சொக்கநாதன் நன்றிகூறலுடன் கூட்டம் 9மணிக்கு முடிந்தது. கூட்டத்திற்கு 5000க்கு மேற்பட்ட தோழர்களும் தாய்மார்களும் வந்திருந்தார்கள் பெரும்பாலும் கருஞ்சட்டையணிந்து வந்திருந்தனர். ந. நி.

ஃ ஃ ஃ

நேதாஜி வாலிபர் சங்கக் கூட்டம்.

ஜெயங்கொண்டம்—செப்-7

இன்று மாலை 6-30க்கு இவ்வூர் சுதந்தர வாசகசாலை கட்டிடத்தில் சங்கத்தலைவர் திரு. K. ரெத்தினசாமி அவர்கள் தலைமையில் சங்ககூட்டம் கூடியது. அதுபோது அடியிற்கண்டவர்கள் இவ்வாண்டின் நிர்வாகஸ்தர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருவாளர்கள். K. ரெத்தினசாமி (தலைவர்) K. V. ஜெயராமன், S. விஸ்வநாதன் (கூட்டுகாரியதரிசிகள்) V. கோபாலகிருஷ்ணன் (பொருள்காப்பாளர்) நிர்வாக உறுப்பினர்களாக P. S B. மூர்த்தி, அ இ, கர்த்தர்கான், T. கோவிந்தராசு, வைத்திலிங்கம் பிள்ளை, சந்திரகாசன்.

தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் முடிவுற்றது.

ந-நி

ஃ ஃ ஃ

உ. நா. கோவிலூர் உயர்தர ஆரம்ப பாடசாலை கட்டிட கமிட்டி அமைப்பு

கோயிலூர் செப்—6

4—10—50உ. மாலை 5—30க்கு திருச்சி மாவட்ட நாட்டாண்மைக் க. மு. க உறுப்பினர் திரு. S. திருமலை மூப்பனார் அவர்கள் தலைமையில் கோவிலூர் துவக்கப்பள்ளியை உயர்தர ஆரம்ப பள்ளியாக (எட்டாம் வகுப்புவரை) மாற்ற 158 உறுப்பினர் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டது. அடியிற்கண்டவர்கள் செயற்குழுவினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருவாளர்கள். முத்துகிருஷ்ணம் பிள்ளை (தலைவர்) சின்னதம்பி மூப்பனார் (உபதலைவர்) சிதம்பர மூப்பனார் (காரியதரிசி) சாமிநாத மூப்பனார் (பொக்கிஷதார்) வி. மருதமுத்து மூப்பனார் (உபகாரியதரிசி) S. திருமலை மூப்பனார் (பொதுசெயலாளர்) தி ஜி போ. மெம்பர்.

ந-நி

Printed by A. P. Ramaswami Pillai at the Sri Rathna Press, (Branch) Jayankondacholapuram.
Edited and Published by M. Bhaskaranar, 17, Ketcheri Street, Jayankondacholapuram.